**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 130/2010</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **17.11.2025** |
| **பெயர்** | **வாசுதேவன்** |
| **த/பெ** | **ரத்தினம்** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.46 பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

13. எனது முந்தைய சாட்சியில் எனது தாத்தாவின் பெயர் முனுசாமி முதலியார் என்று குறிப்பிட்டு இருந்தது என்றால் என் தாத்தாவின் பெயர் முனுசாமிரெட்டியார். என் முந்தைய சாட்சியத்தில் வழக்குசொத்தை எனது தந்தை வாங்கியதாக குறிப்பிட்டு இருந்த போது அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை வாய்மொழியாகவே என் தந்தைக்கு கிடைக்க பெற்றது. என் தந்தை இருக்கும் போதே அவருடன் சேர்த்து அவருடன் பிறந்தவர்கள் ஐவருகிடையே பாகம் பிரிக்கப்பட்டது.

14. என் அத்தை அபூர்வம்மாளுக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 4 வாரிசுகள் அவர்கள் ரேனுகா, நந்தன், தனபால், தேவிகா ஆகியோர் ஆவர். மேற்சொன்னவர்களில் தேவிகாவை தவிர மற்ற 3 நபர்களும் இறந்துவிட்டார்கள். இறந்துவிட்ட 3 நபர்களுக்கும் வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். மேற்சொன்ன இறந்த 3 நபர்களின் வாரிசுகளும் இவ்வழக்கின் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் இல்லை. ரேனுகா மற்றும் அவரின் வாரிசுகள் மட்டுமே இவ்வழக்கின் வாதிகளாக உள்ளார்கள்.

15. 7ம் வாதியான பட்டு என்பவருக்கு வேறு ஏதேனும் பெயர் உள்ளதா என்றால் உள்ளது, பிரேமா என்றும் அழைப்பார்கள். பிரேமாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 1 மகள் மற்றும் 1 மகன். 6ம் வாதியான

பரிமளாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 1 மகள் மற்றும் 1 மகன். எனக்கு 3 ஆண் பிள்கைள் உள்ளனர். பரிமளா மற்றும் பட்டுவின் பெண்பிள்ளைகளை எனது இரண்டு மகன்களுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான்.

16. நெருங்கிய உறவினர் அதாவது சம்மந்தி என்ற முறையில் என்னுடைய சொத்தினை வழக்கு சொத்தாக காண்பிக்காமல் முதல் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்தை மட்டுமே இந்த வழக்கில் வழக்கு சொத்தாக காண்பித்து இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்படி எனக்கு வந்தடைந்த சொத்து உட்பிரிவு ஆகிவிட்டதா என்றால் 1983 – 1984 ல் ஆகிவிட்டது. ரத்தினத்தின் மகளான கௌசல்யா என்பவர் உயிருடன் இல்லை. எப்போது இறந்தார் என்றால் 3–4 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். கௌசல்யாவின் வாரிசுகளை இவ்வழக்கின் தரப்பினா்களாக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

17. என் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட ஒரு பாக சொத்தை தவிர்த்து அவருடன் பிறந்த மற்ற நான்கு சகோதர்களுக்கும் அவர்அவர்களின் சொத்து ஒதுக்கப்பட்டதா என்றால் ஒதுக்கப்பட்டது. சமமாக ஒதுக்கி கொண்டார்களா என்றால் என் தந்தைக்கு 4 ½ செண்ட் அவருடன் உடன்பிறந்த மற்ற நான்கு சகோதர்களுக்கும் தலா 4 செண்ட், அது அல்லாமல் 1 செண்ட் வழிக்காக ஒதுக்கப்பட்டது. மற்ற 4 நபர்களுக்கும் அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் இருந்து 3ம் தர்பினர் கிரையம் பெற்று இருந்தால் அந்த கிரையம் செல்லும் என்றால் நீதிமன்றம் தான் சொல்ல வேண்டும்.

18. ஆறுமுகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதியான ஜெயராமன் என்பவர் பதிவு செய்யப்பட்ட 17.07.1997 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்று இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் 08.08.1994 தேதியில் வரதன், ரேனுகா மற்றும் சரவணன் அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான், முறையாக வாங்கவில்லை.

19. 2ம் வாதியான கெங்கம்மாள் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1977–1978–ல் நடைபெற்று இருக்கலாம். 20.08.1975–ம் தேதியில் தான் திருமண் நடைபெற்றது என்றால் சரியாக தெரியவில்லை. கெங்கம்மாளின் தந்தை பெயர் கோவிந்தரெட்டி. கோவிந்தரெட்டி எப்போது இறந்தார் என்றால் எனக்கு 7–8 வயது இருக்கும் போதே இறந்துவிட்டார். கோவிந்தரெட்டி மனைவி எப்போது இறந்தார் என்றால் கோவிந்தரெட்டி இறந்து அவரின் மனைவி ஒரு வார இடைவெளியில் இறந்தார்.

இவர்களின் பிள்ளைகள் தான் 1 முதல் 3 வாதிகள் என்றால் சரிதான். அவர்களுக்கு அப்போது என்ன வயது இருக்கும் என்றால் லலிதாவிற்கு 7–8 வயது, கெங்கம்மாளுக்கு 6–7 வயது, மற்றும் சாந்தா 5–7 மாதக் குழந்தை.

20. அந்த காலகட்டத்தில் மேற்சொன்ன 1 முதல் 3 வாதிகளையும் ஆறுமுகம், வரதன், மற்றும் ஜெயராமன் ஆகிய மூவரும் ஆளுக்கொரு பிள்ளையை எடுத்து வளர்த்தார்கள் என்றால் சரியல்ல. கெங்கம்மாளுக்கு யார் திருமண் செய்து வைத்தது என்றால் தெரியும். ரத்தினம், ஆறுமுகம், வரதன், மற்றும் ஜெயராமன் ஆகியோர் சேர்ந்து திருமணம் செய்து வைத்தனர். கெங்கம்மாள் திருமணத்திற்காக மைனர்களின் பாதுகாவலராக கோவிந்தரெட்டியின் பாகத்தை 2ம் பிரதிவாதியான சுரேஷ்க்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதி அந்த காலகட்டத்தில் பிறக்கவில்லை.

21. அதுமட்டுமில்லாமல் 1–ம் பிரதிவாதி சேனிரெட்டியார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தினையும் இவ்வழக்கின் வழக்கு சொத்தாக காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு 1ம் பிரதிவாதி சொத்தினை கிரையம் பெற்றாரா என்றால அது குறித்து எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் முறையற்ற வகையில் கிடைக்கப்பெற்றது என கூறும் பட்சத்தில் அந்த ஆவணங்களை ரத்து செய்ய கோரியோ அல்லது வாதிகளின் உரிமையை விளம்புகை செய்ய கோரியோ ஏதேனும் பரிகாரம் இவ்வழக்கில் கேட்கப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை.

22. இவ்வழக்கு சொத்துக்களின் வருவாய் பதிவேடுகளில் 1ம் பிரதிவாதி பெயர் தான் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை தவிர பிற பாகங்கள் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 வில்லங்க சான்று வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதில் வழக்கு சொத்து குறித்து எந்த ஒரு குறிப்பும் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. அந்த வில்லங்க சான்றில் சர்வே எண் 420/4க்கு மட்டும் தான் போடப்பட்டுள்ளது என்றால் என்னுடைய சொத்தை பொருத்து மட்டும் தான் வில்லங்க சான்று போட்டுப்பார்த்தோம்.

23. வழக்கு சொத்தை குறித்து எந்த ஒரு வில்லங்க சான்றும் போட்டுப்பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்குத் தொடுப்பதற்கு முன்பாகவே வில்லங்கம் போட்டுப் பார்த்திருக்கும் பட்சத்தில் 3ம் பிரதிவாதிக்கு 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகள் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து தெரிய வந்துவிடும் என்றும் அவ்வாறு தெரிய வந்தால் இந்த வழக்கை இந்நீதிமன்றம் விசாரிக்க அதிகார

ஆள்வரை இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினாலும் நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்ற காரணத்தினாலும் அதனை நீதிமன்றத்தில் தெரிவிக்கவிலலை என்றால் சரியல்ல.

24. இதுவரை என்னுடைய தூண்டுதலின் பெயரில் தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. மேலும் எனது தந்தை காலத்திலேயே வழக்கு சொத்து குறித்து பாகம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஜெயராமன்ரெட்டியார் வழக்கு சொத்தில் எத்தனை வருடங்களாக அனுபவத்தில் உள்ளார் என்றால் பாகப்பிரிவினை செய்த காலத்தில் இருந்தே ஜெயராம ரெட்டியார் அனுபவத்தில் இருந்தார். இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் மற்றும்ஸ்வாதீனம் மீட்டெடுப்பு பரிகாரம் கோராத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.28. பி.எம்**